**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.13.06.2025**

**O.S. No.368/2015**

**வா.சா.1 – முருகேஷ்**

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் பெரியான் என்ற பெரியசாமிக்குப் பூர்வீகமாகப் பாத்தியப்பட்டதாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெரியான் என்ற பெரியசாமியின் மனைவி பெயர் கருப்பாயி என்றால் சரிதான். பெரியான் என்ற பெரியசாமி காலம் சென்று 30, 35 வருடங்கள் இருக்கும் வழக்கு தாக்கல் செய்வதற்கு 25 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியான் என்ற பெரியசாமிக்கு 5 ஆண் மக்கள், 2 பெண் மக்கள் என்றால் சரிதான். எனது வழக்குப் படி பத்தி பாரா 5ல் சொத்துக்கள் வாய்மொழியாக பிரிவினை செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தபசில் சொத்து தவிர்த்து மற்ற சொத்துக்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளது. நான் இந்த வழக்குச் சொத்துக்களாக 3 அயிட்டச் சொத்துக்களைக் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து கிணறு, அதனுடன் சேர்ந்த வாய்க்கால் வழிநடை என்றால் சரிதான். மேற்படி 1ம் தபசில் சொத்து சின்னக்கோவிலான்குளம் கிராம புஞ்சை சர்வே எண்.8 ல் உள்ளது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3 சென்ட் 20 என்றால் சரியல்ல ஏக்கர் 3 சென்ட் 1. 3ம் தபசில் சொத்து மற்றும் 1ம் தபசில் சொத்து ஒரே புல எண் என்றால் சரிதான் 3வது அயிட்டச் சொத்து கிணற்றுக்கு சரள் மண் அடிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொத்து. 1ம் தபசில் சொத்து 1வது பிரதிவாதி முருகனுக்காக ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 3 வது அயிட்டச் சொத்தில்தான் ஆழ்துளை கிணறு போடப்பட்டு அதில் 1வது பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு எடுக்கப்பட்டுள்ளதா என்றால் பொது இடத்தில் உள்ளது மின் இணைப்பு முருகன் பெயரில் இல்லை. 3 வது அயிட்டச் சொத்தில்தான் ஆழ்துளை கிணறு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் மின் இணைப்பே கிடையாது.

3 வது அயிட்டச் சொத்தில்தான் ஆழ்துளை கிணறில் 1 HP மோட்டார் உள்ளதா என்றால் மோட்டார் எதுவும் கிடையாது. 3 ம் அயிட்டச் சொத்திற்கு எனது பெயரில் பட்டா கிடையாது என்றால் சரியல்ல உண்டு. 1 வது அயிட்டச் சொத்தில்தான் ஆழ்துளை கிணறு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டுப்பங்காளிகள் பெயரில் உள்ளது. மின் இணைப்பு ஒரு ஆள் பெயரில் தான் இருக்கும் என்றால் சரியல்ல அனைவரின் பெயரிலும் உள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு ஒரு ஆள் பெயரில் தான் வழங்கப்படும் என்றால் சரியல்ல. வழக்குத் தபசில் சர்வே எண்.8, 9 சொத்துக்கள் பெரியான் என்ற பெரியசாமிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல பூர்வீகமாகப் பாத்தியப்பட்டதாக என் அப்பா சொன்னார். என்னுடைய வழக்குரைக்கு 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் பத்தி 14 ல் சர்வே எண்.8, 9 சொத்துக்கள் பெரியான் என்ற பெரியசாமிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் சொல்லப்பட்டுள்ளது ஆனால் ஆவண விவரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. எதிர்வழக்குரையில் சர்வே எண்.8, 9 க்கு 18.01.1985, 20.03.1978, 18.01.1985, 14.07.1975 ஆகிய கிரைய ஆவணங்கள் மூலமாக பாத்தியப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சர்வே எண்.7 பற்றி சொல்லப்படவில்லை என்றால் தபசில் சொத்து தவிர மற்ற சொத்துக்கள் வாய்மொழியாகப் பிரிக்கப்பட்டுவிட்டது அதனால் சொல்லவில்லை. சர்வே எண்.7 ன் விஸ்தீரணம் 60 சென்ட் என்றால் தெரியாது.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.06.13 19:45:08 +0530